# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி எண்: 044–22201337.

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 119/ந/2024, நாள்: 15.04.2025**

திரு. வ. கணேசன், — முறையீட்டு மனுதாரர்
தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்

நகராட்சி ஆணையாளர், — எதிர் மனுதாரர்
தேவகோட்டை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கைலாசநாதபுரம் மேற்கு, கதவு எண். 12–ஜி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வ. கணேசன் என்பவரின் 13.04.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2024 அன்று பெறப்பட்டு, 119/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கைலாசநாதபுரம் மேற்கு, கதவு எண். 12–ஜி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வ. கணேசன் என்பவர் தனது 13.04.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

“வ. கணேசன் ஆகிய நான் தேவகோட்டை வட்டம் மற்றும் நகரத்தில் 12 ஜி, கைலாசநாதபுரத்தில் வசித்து வருகிறேன். எனக்கு அருகில் வசிக்கும் நகராட்சி பணியாளர் திருமதி பொன்னம்மாள் அவரது கணவர் திரு. கமலக்கண்ணன் மற்றும் நகராட்சி பணியாளர் திரு. குருசாமி மகன் திரு. கணேசன் என்பவரும் குடியிருப்பு பகுதியின் பொது வெளியில் பொது சுகாதாரத்திற்கு பெரும் இடையூறாக பன்றிகளை வளர்த்து வருகிறார்கள்.

இவர்களின் இந்த சமூக விரோத செயல்களால், இந்த பகுதியில் வசித்து வருகின்றவர்களுக்கும் மற்றும் எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் அடிக்கடி நோய் தொற்று ஏற்பட்டு பாதிப்படைந்து வருகின்றோம். இது குறித்து குறிப்பிட்ட நபர்களிடம்

பன்றிகளை இங்கு வளர்க்காதீர்கள் என்றும் மீறினால் நகராட்சி நிர்வாகத்திடம் புகார் அளிப்போம் என்றதற்கு, நகராட்சி பணியாளர் ஆகிய எங்களுக்கு, எங்கள் மீது நகராட்சி நிர்வாகத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் முன்னரே தெரிந்து விடும் என்றும் அதுசமயம் பன்றிகளை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விட்டு மீண்டும், இந்த பகுதியிலேயே கொண்டு வந்து பன்றிகளை வளர்ப்போம் என்று மிரட்டுவதோடு அல்லாமல், நகராட்சி நிர்வாகத்தால் பன்றிகளை பிடிக்க வருவோர்களை கை, கால்களை உடைத்து அனுப்பி விடுவோம் என்றும் நேரடியாக மிரட்டல் விடுக்கின்றனர். இவர்களின் இந்த செயலானது பல வருடங்களாக தொடர்ந்து வரும் நிலையில், இது குறித்து நகராட்சி நிர்வாகத்திடம் பல புகார் மனுக்கள் அளித்தும் இந்த சமூக விரோதிகளின் செயல்களை இதுநாள் வரை நிரந்தரமாக தடுத்து நிறுத்த முடியாதது நகராட்சி நிர்வாகத்தின் கையாலாகா தனத்தை பட்டவர்த்தனமாக காட்டுவதாக இருந்து வருகிறது. இந்நிலையில், மேலும் ஒரு முயற்சியாகவே தக்க நடவடிக்கை வேண்டி உயர்திரு நகராட்சி ஆணையர் அவர்களுக்கு புகார் மனு (மனு எண்.பொது 0004/2023) கடந்த 18.12.2023 அன்று முதல்வரின் முகவரி துறைக்கு அளிக்கப்பட்டது.

இந்த புகார் மனுவிற்கு அளிக்கப்பட்ட பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக சம்பந்தப்பட்ட பன்றி வளர்க்கும் நபர்கள் எனது வீட்டின் வசிப்பிடத்திற்கு மிக அருகிலேயே பன்றிகளை வளர்த்து வருகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பன்றிகளை இங்கு வளர்க்காமல் வேறு இடத்திற்கு கொண்டு சென்று வளர்க்கும்படி கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் இந்த இடத்தில் தான் பன்றிகளை வளர்ப்போம் என்றும் வேண்டுமானால் நீங்கள் உங்கள் வசிப்பிடங்களை காலி செய்து கொண்டு சென்று விடுங்கள் என்று மிகவும் அராஜகமாகவும், அதிகாரமாகவும் மிரட்டி வருகின்றனர்.

இவர்களின் இந்த அராஜக போக்கிற்கு நகராட்சி அலுவலக அலுவலர்களும் கண்டும் காணாதது போல் இவர்களுக்கு துணையாக இருப்பது என்ற இந்த செயலானது எனது குடும்பத்தினரையும் மற்றும் அண்டை வீட்டாரையும் மிகுந்த துயரத்திற்கும், மன உளைச்சலுக்கும் ஆளாக்குவதாக இருக்கின்றது.

எனவே கனம் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ஆகிய தாங்கள் பொது வெளி மற்றும் குடியிருப்பு பகுதிகளில் வளர்க்கப்படும் பன்றிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்படியும் மற்றும் இந்த சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் நகராட்சி பணியாளர்கள் மீதும் அவர்களுக்கு துணையாக செயல்பட்டு கொண்டிருக்கும் நகராட்சி நிர்வாகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மீதும் துறைரீதியான தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியும் தங்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தேவகோட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 30.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி ஆணையர் தனது 24.09.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பன்றிகள் வளர்த்து வருவதாகவும், அது தொடர்பாக மனுதாரர் புகார் மனு அனுப்பி தேவகோட்டை நகராட்சி மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பன்றி வளர்த்து வருவோருக்கு தேவகோட்டை நகராட்சி சார்பில் 1939ம் வருடத்திய தமிழ்நாடு பொதுசுகாதாரச்சட்டம் பிரிவுகள் 41 (1) (3) (4) (8) 25/51 (1) 108 (1) (b) மற்றும் 134–ம் கீழ் கொடுக்கப்படும் அறிவிப்பு கடிதம் நாள் 10.09.2024 1) திரு.கு.கணேசன் த/பெ. குருசாமி 2) திரு. பெ. கமலக்கண்ணன் த/பெ. பெருமாள் 3) திரு. ம. சதீஸ்குமார் த/பெ. மதிவாணன் ஆகிய நபர்களுக்கு வழங்கப்பட்டு, நகர் எல்லைக்குள் பன்றிகள் பொது இடங்களில் பராரியாக திரியாத வண்ணம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக நகர் காவல் நிலையத்திற்கு தேவகோட்டை நகராட்சி சார்பில் புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது. அதன் நகல் மற்றும் தேவகோட்டை நகராட்சி சுகாதார அலுவலரின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. எனவே புகார்தாரர் திரு. வ. கணேசன் என்பவரது புகார் மனுவில் உள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானது என தெரிய வருவதால், அன்னாரின் புகார் மனுவினை ரத்து செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 20.01.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 06.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. வ. கணேசன் என்பவர் 20.01.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தேவகோட்டை நகரம் மற்றும் கைலாசநாதபுரம் மேற்கு பகுதியில் சுற்றித் திரியும் பன்றிகளால், நானும், இந்நகர வாசிகளும் தொடர்ந்து பல சுகாதார சீர்கேட்டிற்கு ஆளாகி வருகின்றோம். இந்நிலையை தடுத்து, பன்றிகளை அப்புறப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கவும், தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கான பணிகளை தடையற செய்ய வேண்டும்படியும், மீண்டும் இந்நிலை தொடராமல் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ, அவை அனைத்தையும் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தினர் மேற்கொள்ள வேண்டி இம்முறைமன்ற நடுவத்தின் வாயிலாக பணிவுடன் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி ஆணையாளரின் 09.01.2025 நாளிட்ட கடிதத்தில் 21.01.2025 அன்று அரசு சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளதால், தனது சார்பாக தேவகோட்டை நகராட்சியில் சுகாதரா அலுவலராக பணிபுரியும் திரு. ரா. ரவிச்சந்திரன் என்பரை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 20.01.2025அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் தேவகோட்டை நகராட்சியில் பணிபுரியும் சுகாதரா அலுவலர் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த மார்ச் 2023, 31–ந் தேதி மற்றும் 04.10.2023 மேலும் 08.01.2025 ஆகிய தேதிகளில் பன்றி வளர்ப்போருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய விழிப்புணர்வு வழங்கப்பட்ட பின்னர் மீறி பன்றிகள் வளர்க்கப்பட்டது கண்டறியப்பட்டதால் மேற்கண்ட தேதிகளில் பன்றிகளை பிடித்து முறையாக அப்புறப்படுத்தப்பட்டன.

இனி வரும் காலங்களில் மீண்டும் பொதுமக்களுக்கு பன்றித்தொல்லை இருந்தால் தொடர்ந்து முறைப்படி பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதியளிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், தேவகோட்டை நகராட்சி சுகாதார அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரரின புகார் மனுவில் தங்களது குடியிருப்பு பகுதியின் பொது வெளியில் பொது சுகாதாரத்திற்கு பெரும் இடையூறாக பன்றிகளை வளர்த்து வருவதாகவும், பன்றிகளை வளர்ப்பவர்கள் தேவகோட்டை நகராட்சி பணியாளர்களின் உறவினர்களாக உள்ளதால், தனக்கு நேரடியாக மிரட்டல் விடுவதாகவும், இது குறித்து நகராட்சி நிர்வாகத்திடம் பல புகார் மனுக்கள் அளித்தும் இதுநாள் வரை நகராட்சி நிர்வாகத்தினர் பொது வெளியில் பன்றிகளை வளர்ப்பதை தடுத்து நிறுத்தவில்லை என தெரிவித்துள்ளார்.

தேவகோட்டை நகராட்சி சார்பில் 1939ம் வருடத்திய தமிழ்நாடு பொதுசுகாதாரச்சட்டம் பிரிவுகள் 41 (1) (3) (4) (8) 25/51 (1) 108 (1) (b) மற்றும் 134–ம் கீழ் கொடுக்கப்படும் அறிவிப்பு கடிதம் நாள் 10.09.2024 1) திரு.கு.கணேசன் த/பெ. குருசாமி 2) திரு. பெ. கமலக்கண்ணன் த/பெ. பெருமாள் 3) திரு. ம. சதீஸ்குமார் த/பெ. மதிவாணன் ஆகிய நபர்களுக்கு வழங்கப்பட்டு, நகர் எல்லைக்குள் பன்றிகள் பொது இடங்களில் பராரியாக திரியாத வண்ணம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தேவகோட்டை ஆணையரின் 24.09.2024 நாளிட்ட அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது. மேலும், தேவகோட்டை நகராட்சி மூலம் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தும்போது, பணி செய்யவிடாமல், தடுப்பதோடு, பணியாளர்களை கொலைமிரட்டல் விடுவதாக தெரிவித்து, பன்றி வளர்க்கும் உரிமையாளர்களை அழைத்து பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்துவதற்கும், எழுத்துபூர்வமாக எழுதி வாங்கி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேவகோட்டை நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு, தேவகோட்டை ஆணையரால் 18.09.2024 நாளிட்ட கடிதம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பன்றி வளர்ப்போருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய விழிப்புணர்வு வழங்கப்பட்ட பின்னரும், விதி மீறி பன்றிகள் வளர்க்கப்பட்டது கண்டறியப்பட்டதால் அவற்றை பிடித்து முறையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இனி வரும் காலங்களில் பொதுமக்களுக்கு பன்றித்தொல்லை ஏற்படாதவாறு முறைப்படி பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேவகோட்டை நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி சுகாதார அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிவித்துள்ளார். தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் தேவகோட்டை நகராட்சி சுகாதார அலுவலர் தனது வாக்குமூலம் வாயிலாக வாக்குறுதியளித்துள்ளதை ஏற்று, இதுபோன்ற புகார்களுக்கு இடம்கொடா வண்ணம், குடியிருப்பு பகுதியின் பொது வெளியில் பன்றிகள் வளர்த்து வருவதை தடுத்து நிறுத்தவும், பெது சுகாதாரம் பேணவும் தேவையான துரித நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என

தேவகோட்டை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. வ. கணேசன்,
   கதவு எண்.12–ஜி, கைலாசநாதபுரம் மேற்கு,
   தேவகோட்டை,
   சிவகங்கை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   தேவகோட்டை நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/4/25
செயலாளர்.